அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–600 006
மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு மார்ச்–2025
விலங்கியல் –விடைக்குறிப்புகள் (தமிழ் வழி)

# Part – III விலங்கியல்

மொத்த மதிப்பெண்கள்–70

குறிப்பு நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

## பகுதி–I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 15X1=15

| வகை - A | | | வகை - B | | | மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|
| வினா எண் | விடை குறியீடு | விடை | வினா எண் | விடை குறியீடு | விடை | |
| 1 | (ஆ) | தொடர் சிறுநீர் வெளியேற்றம் | 1 | (ஈ) | உச்ச மின் முனைப்பியக்கம் | 1 |
| 2 | (ஈ) | வகைப்பாட்டுத் தொகுதி | 2 | (ஆ) | மையோகுளோபின் | 1 |
| 3 | (அ) | (ii) மற்றும் (iv) தவறு | 3 | (ஆ) | தொடர் சிறுநீர் வெளியேற்றம் | 1 |
| 4 | (அ) | ஹைப்போதலாமஸ் | 4 | (அ) | 500 மி.லி | 1 |
| 5 | (ஈ) | உச்ச மின் முனைப்பியக்கம் | 5 | (ஈ) | வகைப்பாட்டுத் தொகுதி | 1 |
| 6 | (ஈ) | இராட்சதத்தன்மை | 6 | (அ) | AB | 1 |
| 7 | (அ) | 500 மி.லி | 7 | (அ) | (ii) மற்றும் (iv) தவறு | 1 |
| 8 | (இ) | ஹைப்போதலாமஸ் | 8 | (அ) | ஹைப்போதலாமஸ் | 1 |
| 9 | (ஆ) | மையோகுளோபின் | 9 | (ஈ) | மேற்கூறிய அனைத்தும் | 1 |
| 10 | (அ) | AB | 10 | (ஈ) | இராட்சதத்தன்மை | 1 |
| 11 | (ஆ) | டினோஃபோரா | 11 | (ஈ) | கரப்பான்பூச்சி | 1 |
| 12 | (ஈ) | (ஆ) மற்றும் (இ) | 12 | (ஆ) | டினோஃபோரா | 1 |
| 13 | (ஈ) | மேற்கூறிய அனைத்தும் | 13 | (இ) | கார்டிசோல் மற்றும் ஆல்டோஸ்டீரோன் ஆகியவை ஸ்டீராய்டு ஹார்மோன்கள் ஆகும். | 1 |
| 14 | (ஈ) | கரப்பான்பூச்சி | 14 | (ஈ) | (ஆ) மற்றும் (இ) | 1 |
| 15 | (இ) | கார்டிசோல் மற்றும் ஆல்டோஸ்டீரோன் ஆகியவை ஸ்டீராய்டு ஹார்மோன்கள் ஆகும். | 15 | (இ) | ஹைப்போதலாமஸ் | 1 |

## பகுதி– II

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

வினா எண்.**24**க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **6X2=12**

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 16 | **இருவாழ்வியின் நைட்ரஜன் கழிவுப் பொருட்கள்**<br>இருவாழ்வியின் இளம் உயிரி –அம்மோனியா<br>இருவாழ்வியின் முதிர் உயிரி – யூரியா | 1<br>1 |
| 17 | **இயன் மருத்துவம்**<br>செயலிழந்த கை, கால்களை உடற்பயிற்சி சிகிச்சையின் மூலம் இயல்பாக செயல்பட வைக்கும் முறை | 2 |
| 18 | **எபிதீலியத் திசுக்களின் செயல்பாடுகள்**<br>1. பாதுகாப்பு<br>2. உறிஞ்சுதல்<br>3. வடிகட்டுதல்<br>4. கழிவுநீக்கம்<br>5. சுரப்பு<br>6. உணர்வறிதல் (ஏதேனும் நான்கு) | 4 X 1/2 =2 |
| 19 | **மனித பெருங்குடல் அமைப்பு**<br><br><br>படம்<br>பாகம் (ஏதேனும் இரண்டு) | 1<br>1 |
| 20 | **சுடர் செல்கள்**<br>பிளாட்டிஹெல்மின்தஸ் / தட்டைப்புழுக்களில் காணப்படும் சிறப்பு வாய்ந்த கழிவுநீக்க செல்கள். | 2 |
| 21 | **குளுக்கோமீட்டரின் முக்கியத்துவம்**<br>1. கையடக்கமானது. எளிதில் தூக்கி செல்லக்கூடியது.<br>2. நாற்பது வினாடிகளுக்குள்முடிவு தெரியும் வகையில் இயங்குகின்றன.<br>3. கணக்கீடு தேவையில்லை<br>4. கருவியை பயன்படுத்த பயிற்சி தேவையில்லை. (ஏதேனும் இரண்டு) | 2 X1=2 |
| 22 | **அலரி தசையின் வேலை**<br>கரப்பான்பூச்சியின் இரத்த ஓட்டத்திற்கு முக்கிய காரணம். | 2 |
| 23 | **நிணநீர்**<br>நிணநீர் நாளங்களில் உள்ள திரவம். | 2 |

| | | |
|---|---|---|
| 24 | **கூட்டு மீன் வளர்ப்பு**<br>வெவ்வேறு சிற்றினங்களைச் சார்ந்த சில மீன்களை குறிப்பிட்ட விகிதத்தில் குளத்தில் ஒன்றாக வளர்க்கும் முறை. | 2 |

## பகுதி–III

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு** மட்டும் விடையளிக்கவும்.
வினா எண்.**33 க்கு** கட்டாயமாக விடையளிக்கவும் **6X3=18**

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 25 | **மனிதவெள்ளையணுக்களின் வகைகள்**<br><br>வெள்ளையணுக்களின் வகைகள் (பெயர்கள்)<br><br>இயோசினோஃபில்  பேசோஃபில்  நியூட்ரோஃபில் <br>மோனோசைட்  லிம்ஃபோசைட்  | 1<br><br>1<br><br>1 |
| 26 | **குருட்டு புள்ளி**<br>1. கண்ணின் பின் முனையில் மையப்பகுதிக்கு சற்று கீழாக இரத்தக் குழாய்களும் பார்வை நரம்பும் கண்ணிற்குள் நுழைகின்றன.<br>2. இப்பகுதியில் ஒளியுணர் செல்கள் கிடையாது. | 2<br><br>1 |
| 27 | **பெயரிடுவதற்கான அடிப்படை விதிகள்**<br>1. அறிவியல் பெயரைஅச்சிடும் போது சாய்வான எழுத்துகளைப் பயன்படுத்த வேண்டும். கைகளால் எழுதும் போது ஒவ்வொரு சொல்லையும் இடைவெளிவிட்டு அடிக்கோடிட வேண்டும்.<br>2. பேரினப் பெயரின் முதலெழுத்து பெரிய எழுத்தால் எழுதப்பட வேண்டும்.<br>3. சிற்றினப் பெயர் சிறிய எழுத்தால் எழுதப்பட வேண்டும்.<br>4. இரு வெவ்வேறு உயிரிகளின் அறிவியல் பெயர்கள் ஒன்றாக இருக்காது.<br>5. உயிரினத்தின் அறிவியல் பெயரை எழுதும் போது அதனைக் கண்டறிந்து விளக்கிய அறிவியல் அறிஞரின் பெயரையோ அல்லது அவரது சுருக்கமான பெயரையோ அதை பதிவு செய்த ஆண்டுடன் சேர்த்து எழுத வேண்டும்.<br>6. சிற்றினைதைக் கண்டறிந்த அறிஞரின் பெயரை அவ்வினத்திற்கு வைக்கும் போது சிற்றினப் பெயர் i,ii அல்லது ae உடன் முடிய வேண்டும்.<br>(ஏதேனும் மூன்று) | 3X1=3 |

| | | | |
|---|---|---|---|
| 28 | **மீள் தன்மை நாரிழைகள்** | **மீள் தன்மை இணைப்புத் திசு** | |
| | 1. மீள் தன்மை நாரிழைகள் அடர்வான இணைப்பு திசுக்களின் ஓர் பகுதி. | மீள் தன்மை இணைப்புத் திசு அடர்வான இணைப்புத் திசுவின் ஒரு வகை. இவற்றில் மீள் தன்மை நாரிழைகள் அதிகம் காணப்படுகின்றன. | 1 |
| | 2. இவை எலும்புத் தசைகளோடு எலும்பை இணைக்கும். ஒரு எலும்பை மற்றொரு எலும்புடன் இணைக்கும். | பெரிய தமனிகளின் சுவரிலும், முதுகெலும்புத் தொடரில் காணப்படும் எலும்பிணைப்பு நார்களிலும், சுவாசக் குழல் சுவர்களிலும் காணப்படும். | 1 |
| | 3. ஒரு குறிப்பிட்ட திசையிலிருந்து அளிக்கப்டும் இழுவிசை அழுத்தத்தை தாங்கும். | இழுக்கப்பட்ட தசைகள் மீண்டும் சுருண்டு பழைய நிலையை அடைதல் மீள் தன்மை நாரிழையால் நடைபெறுகிறது. | 1 |
| 29 | **எலும்பு மீன்களின் முக்கிய பண்புகள்**<br>1. நன்னீர் மற்றும் கடல்நீரில் வாழும் மீன்கள்<br>2. எலும்பினால் ஆக்கப்பட்ட அகச்சட்டத்தையும் உடையவை<br>3. கதிர் வடிவ உடலமைப்பு<br>4. இவ்வுயிரிகளின் தோல்–கேனாய்டு, சைக்ளாய்டு அல்லது டீனாய்டு வகை செதில்களால் மூடப்பட்டுள்ளது.<br>5. இருபக்கங்களிலும் உள்ள செவுள் மூடிகளால் மூடப்பட்ட நான்கு இணை இழை வடிவ செவுள்கள் சுவாசிக்கப் பயன்படுகின்றன.<br>6. உணவுக் குழலுடன் இணைக்கப்பட்ட அல்லது இணைக்கப்படாத காற்றுப் பைகள் காணப்படுகின்றன. இவை காற்றுப் பரிமாற்றத்திற்கும், திருக்கை மீன்களில் மிதவைத் தன்மையை கொடுக்கவும் பயன்படுகின்றன.<br>7. வயிற்றுப்புறத்தில் ஈரறைகளைக் கொண்ட இதயம் காணப்படுகிறது.<br>8. அமோனியாவை கழிவுப் பொருளாக வெளியேற்றும் மீசோநெப்ரிக் வகை சிறுநீரகம் காணப்படுகிறது.<br>9. பக்கக்கோட்டு உணர்உறுப்புகள் காணப்படுகின்றன.<br>10. ஆண் பெண் உயிரிகள் தனித் தனியானவை.<br>11. புறக் கருவுறுதல் நடைபெறுகிறது.<br>12. பெரும்பாலும் முட்டையிடுபவை. (ஏதேனும் மூன்று ) | | 3X1=3 |
| 30 | **அட்ரீனல் கார்டெக்ஸின் அடுக்குகள்**<br>சோனா குளாமருலோசா<br>சோனா பாஸிகுலேட்டா<br>சோனா ரெடிகுலாரிஸ் | | 1<br>1<br>1 |
| 31 | **குறுக்குக் கலப்பு**<br>இது உயர்தர பண்புகளை உடைய ஒரு இனத்தின் ஆண் விலங்கு மற்றும் உயர்தர பண்புகளை உடைய மற்றொரு இனத்தின் பெண் விலங்கு இவற்றின் இடையே செய்யப்படும் கலப்பு ஆகும். | | 3 |
| 32 | **ஸ்பிக்மோமானோமீட்டரின் மருத்துவ முக்கியத்துவம்**<br>1. மிகையழுத்தம் குறையழுத்தம் போன்ற அபாயகரமான இரத்த அழுத்த நிலைகளைக் கண்டறிய உதவுகிறது.<br>2. இரத்த ஓட்ட நிலைமையை மதிப்பிட உதவுகிறது.<br>3. இதயச் செயல்பாடு பற்றிய விளக்கத்தை அளிக்கிறது. | | 1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 33 | **தூக்கத்தின் போது ஏன் சிலர் குறட்டை விடுகிறார்கள்**<br>1. உறக்கத்தில் நாம் மூச்சு விடும்போது மென் அண்ணப்பகுதி அதிர்வடைவதால் கரகரப்பான ஒலி ஏற்படுகிறது.<br>2. சரியாக மூடப்படாத சுவாசப்பாதையின் மேற்பகுதி (மூக்கு, தொண்டை) மிக குறுகலாகி போதுமான அளவு காற்று நுரையீரல் வழியாக செல்வதை தடுக்கிறது.<br>3. இதனால் சுற்றியுள்ள திசுக்கள் அதிர்வடைந்து குறட்டை ஒலி ஏற்படுகிறது. | 1<br>1<br>1 |

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5X5=25**

| வினா எண் | விடை | | மதிப்பெண் |
|---|---|---|---|
| 34 (அ) | **குச்சி செல்கள் மற்றும் கூம்பு செல்கள் வேறுபாடு** | | |
| | **குச்சி செல்கள்** | **கூம்புசெல்கள்** | |
| | 1. இவை குறைந்த ஒளியில் பார்வைக்கு உதவுகின்றன. | இவை நிறங்களை உணரப் பயன்படுகிறது, அதிக ஒளியில் சிறப்பாக வேலை செய்கின்றன. | 1 |
| | 2. இதில் ரொடாப்சின் எனும் நிறமி காணப்படுகிறது. | இதில் போட்டோப்சின் எனும் நிறமி காணப்படுகினறன. | 1 |
| | 3. ரொடாப்சின், ஸ்கோட்டோப்சின் எனும் புரதமும் ரெட்டினால் எனும் வைட்டமின் A ஆல்டிஹைடும் இணைந்து உருவானது. | போட்டோப்சின் ஆப்சின் எனும் புரதமும் ரெட்டினாலும் இணைந்து உருவானது. | 1 |
| | 4. விழித்திரையில் ஏறத்தாழ 120 மில்லியன் குச்சி செல்கள் உள்ளன. | விழித்திரையில் 6–7 மில்லியன் கூம்பு செல்கள் உள்ளன. | 1 |
| | 5. போவியாவை சூழ்ந்துள்ள பகுதியில் இவை அதிகமாக காணப்படுகிறது. | இவை போவியா பகுதியில் அதிக செறிவுடன் காணப்படுகின்றன. | 1 |
| | (அல்லது) | | |
| 34 (ஆ) | **ஹைபர்கிளைசீமியா மற்றும் ஹைப்போகிளைசீமியா வேறுபாடு** | | |
| | **ஹைபர்கிளைசீமியா** | **ஹைப்போகிளைசீமியா** | |
| | 1. இன்சுலின் குறை சுரப்பால் ஏற்படுகிறது. | இன்சுலின் மிகை சுரப்பால் ஏற்படுகிறது. | 2 |
| | 2. இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகரிக்கும் நிலை | இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு குறைந்திருக்கும் நிலை | 1 |
| | 3. அறிகுறிகள்.<br>பாலியூரியா (மிகை சிறுநீர்ப்போக்கு), பாலிபேஜியா (மிகையான உணவை உட்கொள்ளுதல்), பாலிடிப்சியா (அதிகதாகம் காரணமாக மிகையான நீர் பொருட்களை அருந்துதல்), கீடோசிஸ்<br>(ஏதேனும் இரண்டு அறிகுறிகள்) | அறிகுறிகள்.<br>இதயத் துடிப்பு அதிகரிப்பு, பலவீனம், பய உணர்வு, தலைவலி, குழப்பநிலை, ஒருங்கிணைப்பின்மை, பேச்சு குளறல், கால், கை வலிப்பு மற்றும் கோமா போன்ற தீவிர மூளை தொடர்பான நோய்கள்<br>(ஏதேனும் இரண்டு அறிகுறிகள்) | 2 |

**35 (அ)**

முதுகு நாணுடையவை மற்றும் முதுகு நாணற்றவை வேறுபாடு

| | முதுகு நாணுடையவை | முதுகுநாணற்றவை |
|---|---|---|
| 1. | முதுகு நாண் உண்டு. | முதுகு நாண் இல்லை |
| 2. | முதுகுபுற உள்ளீடற்ற ஒற்றை நரம்புவடம் உண்டு. | ஓர் இணை வயிற்றுப்புற திட நரம்புவடம் உண்டு |
| 3. | தொண்டை செவுள் பிளவுகள் காணப்படுகின்றன. | செவுள் பிளவுகள் இல்லை. |
| 4. | இதயம், வயிற்றுப்புறத்தில் காணப்படுகிறது. | இதயம் இல்லை, இருந்தால் அது முதுகுப்புறத்திலோ, பக்கவாட்டிலோ அமைந்துள்ளது. |
| 5. | மலத்துளைக்குப் பின் அமைந்த வால் காணப்படுகிறது | அத்தகைய வால் இல்லை. |
| 6. | உணவுக்குழல் நரம்புவடத்திற்குக் கீழே காணப்படுகிறது. | உணவுக்குழல் நரம்புவடத்திற்கு மேலாகக் காணப்படும். |

(ஏதேனும் ஐந்து)

5×1 = 5

(அல்லது)

**35 (ஆ)**

**தவளையின் ஆண் இனப்பெருக்க மண்டலம்**

1. ஓரிணை விந்தகங்கள் ஆண் இனப்பெருக்க உறுப்புகளாகும். ஒவ்வொரு விந்தகமும் "மீசார்க்கியம்" என்னும் பெரிட்டோனிய சவ்வு மடிப்புகள் மூலம் சிறுநீரகங்கள் மற்றும் முதுகுப்புற சுவரில் இணைக்கப்பட்டுள்ளது. — 1
2. விந்தகங்களிலிருந்து தோன்றும் விந்து நுண்குழல்கள் பீட்டர் கால்வாய்கள் இறுதியில் அந்தந்த பக்கத்து சிறுநீரக நாளங்களில் திறக்கின்றன. — 1
3. இதனால் சிறுநீரக நாளம் பொதுவான கழிவுநீக்க – இனப்பெருக்கப் பாதையாகி பொதுக்கழிவுத்துளையில் திறக்கிறது. — 1




படம் — 1

பாகம் (ஏதேனும் நான்கு) — 1

| | | |
|---|---|---|
| 36<br>(அ) | **கல்லீரலின் பணிகள்**<br>1. பித்தநீரைச் சுரத்தல்.<br>2. வயதான பழுதுபட்ட இரத்த செல்களை அழித்தல்.<br>3. குளுக்கோசை கிளைகோஜன் வடிவத்தில் சேமித்து வைக்கின்றது அல்லது கணைய ஹார்மோன்களின் செயல்பாட்டினால் மீண்டும் குளுக்கோஸாக இரத்தத்தில் விடுவிக்கின்றது.<br>4. கொழுப்பில் கரையும் வைட்டமின்களையும் இரும்பையும் சேமிக்கின்றது.<br>5. நச்சுப்பொருட்களை சிதைத்து நச்சுத்தன்மையற்றதாக மாற்றுகிறது.<br>6. யூரியா மற்றும் அவசியமற்ற அமினோஅமிலங்களை உருவாக்குவதில் பங்கேற்கின்றன. (ஏதேனும் ஐந்து) | 5×1=5 |
| (அல்லது) | | |
| 36<br>(ஆ) | **சுவாச நிகழ்வின் படிநிலைகள்**<br>1. வளிமண்டலம் மற்றும் நுரையீரல்களுக்கு இடையேயான வாயு பரிமாற்றம்.<br>2. நுரையீரல்களுக்கும் இரத்தத்திற்கும் இடையேயான $O_2$ மற்றும் $CO_2$ பரிமாற்றம்.<br>3. இரத்தத்தின் மூலம் $O_2$ மற்றும் $CO_2$ ஆகியவை கடத்தப்படுதல்.<br>4. இரத்தம் மற்றும் செல்களுக்கு இடையேயான வாயு பரிமாற்றம்.<br>5. செல்கள் பல உடல் செயலியல் செயல்களை செய்ய $O_2$ ஐ எடுத்துக் கொள்ளுதலும் $CO_2$ ஐ வெளியேற்றுதலும். | 1<br>1<br>1<br>1<br>1 |
| 37<br>(அ) | **<u>சிறுநீர்ப்பெருக்கெதிர் ஹார்மோன் (ADH)</u>**<br>➢ சேகரிப்புநாளம் மற்றும் சேய்மை சுருள் நுண் குழல்களின் செல்பரப்புகளில் அக்குவாபோரின்களின் எண்ணிக்கை அதிகரித்து நீர் மீள உறிஞ்சல் அதிகரிக்கிறது.<br>➢ ஹைப்போதலாமஸில் சுரக்கப்படுகிறது.<br>➢ உடலிலிருந்து அதிக அளவில் திரவ இழப்பு ஏற்படுதல் அல்லது இரத்த அழுத்தம் அதிகரிப்பு போன்றவைகளால் ஹைப்போதலாமஸின் ஊடுகலப்பு உணர்விகள் உடனடியாக தூண்டப்படுகின்றன. இதன் விளைவாக நியூரோஹைப்போபைஸிஸ் தூண்டப்பட்டு ADH ஹார்மோன் வெளியிடப்படுகிறது.<br><br>அளவிற்கதிகமாக பழச்சாறு அருந்தும் போது ஹைப்போதலாமஸில் உள்ள ஊடுகலப்பு உணர்வேற்பிகள் தூண்டப்படாததால் நியூரோஹைப்போபைஸிஸில் ADH ஹார்மோன் உற்பத்தி குறைகிறது. | 2<br>1<br>1<br>1 |
| (அல்லது) | | |
| 37<br>(ஆ) | **தொடர் உடற்பயிற்சி செய்வதன் நன்மைகள்**<br>1. தசைகள் நீண்டு வளர்வதுடன் உறுதியாகின்றன.<br>2. இதய தசை ஓய்வு வீதம் குறைகின்றன.<br>3. தசை நார்களில் நொதிகளின் உற்பத்தி உயர்கின்றன.<br>4. தசை நார் மற்றும் தசை நாண்கள் உறுதி அடைகின்றன.<br>5. மூட்டுகள் மேலும் வளையும் தன்மை அடைகிறது.<br>6. மாரடைப்பிலிருந்து பாதுகாப்பு கிடைக்கின்றன.<br>7. ஹார்மோன்களின் செயல்பாட்டை அதிகரிக்கிறது.<br>8. அறிவாற்றல் தொடர்பான பணியை மேம்படுத்துதல்.<br>9. உடல் பருமனை தடுக்கிறது.<br>10. தன்னம்பிக்கையையும் மரியாதையையும் அதிகரிக்கிறது.<br>11. நல்ல உடல் கட்டு அழகு பண்பை கூட்டும்.<br>12. தரமான வாழ்வுடன் ஒட்டுமொத்தமாக உடல் நலமடைகின்றன.<br>13. மனஅழுத்தம், தகைப்பு மற்றும் பதட்டம் ஆகியவற்றை தடுக்கிறது.<br>(ஏதேனும் ஐந்து) | 5X1=5 |

| 38 (அ) | தமனி மற்றும் சிரை வேறுபாடு | | |
|---|---|---|---|
| | **தமனி** | **சிரை** | |
| | 1. இதயத்திலிருந்து இரத்தத்தை எடுத்துச் செல்பவை. | இரத்தத்தை இதயத்திற்கு எடுத்து வருபவை. | |
| | 2. சுவர்கள் தடித்தவை. | மெல்லிய சுவரை கொண்டது. | |
| | 3. இரத்த அழுத்தம் அதிகம். | இரத்த அழுத்தம் குறைவு | |
| | 4. நுரையீரல் தமனியைத் தவிர, பிற தமனிகள்அனைத்தும் ஆக்சிஜன் கலந்த இரத்தத்தை எடுத்துச் செல்கின்றன. | நுரையீரல் சிரையை தவிர பிற சிரைகள் அனைத்தும் ஆக்சிஜனற்ற இரத்தத்தை எடுத்து செல்கின்றன. | 5X1=5 |
| | 5. வால்வுகள் இல்லை. | வால்வுகள் உண்டு. | |
| | 6. இடையடுக்கு தடித்தது. | இடையடுக்கு மெல்லியது. | |
| | 7. சிதைவடையாதவை. | சிதைவடையக் கூடியது. | |
| | 8. உடலில் ஆழமாக பதிந்து காணப்படுகிறது. | உடலில் மேற்புறமாக பதிந்து காணப்படுகிறது. | |
| | 9. உட்பகுதி குறுகலானது. | உட்பகுதி அகன்றது. | |
| | | (ஏதேனும் ஐந்து) | |

(அல்லது)

| 38 (ஆ) | <u>கரப்பான் பூச்சியின் செரிமான மண்டலம்</u> | |
|---|---|---|




| | | |
|---|---|---|
| | படம் | 3 |
| | பாகம் (ஏதேனும் நான்கு) | 2 |